# மெட்ரோ ரயில் சேவை அதிகரிப்பு



பிரதமர் மோடி சென்னை வருவதை முன்னிட்டு, டி.எம்.எஸ்., மெட்ரோ ரயில் நிலையத்தில், போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னை, பிப். 12–

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட் ரல் நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இப்பாதையில், திங்கள் முதல், சனிக்கிழமை வரை, காலை, 8:00 மணி முதல், 10:00 மணி வரையும், மாலை, 4:00 மணி முதல், 7:00 மணி வரையும், 7 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இன்று முதல், 5 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும்.

காலை, 5:30 மணியில் இருந்து, 8:00 மணி வரையும், காலை, 10:00 மணி முதல், மாலை, 4:00 வரையும், இரவு, 7:00 மணி முதல், இரவு, 10:00 மணி வரையும், 10 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும்.

இரவு, 10:00 மணி முதல், 11:00 மணி வரை, 28 நிமிட இடைவெளிக்கு பதிலாக, இன்று முதல், 15 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடு முறை நாட்களில், நாள் முழுதும், 20 நிமிட இடை வெளியில், ரயில்கள் இயக்கப்படும் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.